# நெரிசல் இல்லாத நேரங்களில் ஏசியை அணைக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் முடிவு

**சென்னை, மே 28:** சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், தண்ணீரைச் சேமிக்கும் வகையில், மெட்ரோ ரயில் நிலையங்களில் கூட்ட நெரிசல் இல்லாத நேரங்களில் குளிர்சாதன பெட்டிகளை அணைக்க மெட்ரோ ரயில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

சுரங்க மெட்ரோ ரயில் நிலையத்தின் தேவைக்கு தினசரி 9,000 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இந்த தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, மெட்ரோ ரயில் நிலையங்களில் சரியான காற்றோட்டத்தை உறுதி செய்த பிறகு குளிர்சாதன திறனை படிப்படியாக குறைக்க மெட்ரோ நிர்வாகம் முடிவு செய்துள்ளது. தண்ணீர் சிக்கனமாக பயன்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.